பெருநகர சென்னை மாநகராட்சி

செய்தி வெளியீடு

செ.வெ.எண். 570 நாள்: 13.10.2026

**பெருநகர சென்னை மாநகராட்சிப் பகுதிகளில் ஒருமுறைப் பயன்பாட்டு நெகிழிப் பொருட்களின் தடை அமலாக்கத்தை கண்காணிப்பதற்கான பெருநகர சென்னை பகுதி சிறப்புப் பணிக்குழுவின் 3ஆவது ஆய்வுக் கூட்டம் பணிக்குழுவின் தலைவர்/மாநகராட்சி ஆணையாளர் டாக்டர் ஜி.எஸ்.சமீரன், இ.ஆ.ப., அவர்கள் தலைமையில் இன்று நடைபெற்றது.**

இன்று (13.10.2026) பெருநகர சென்னை பகுதி சிறப்புப் பணிக்குழுவின் தலைவர்/மாநகராட்சி ஆணையாளர் டாக்டர் ஜி.எஸ்.சமீரன், இ.ஆ.ப., அவர்கள் தலைமையில், பெருநகர சென்னை மாநகராட்சிப் பகுதிகளில் ஒருமுறைப் பயன்பாட்டு நெகிழிப் பொருட்களின் தடை அமலாக்கத்தை கண்காணிப்பதற்கான பெருநகர சென்னை பகுதி சிறப்புப் பணிக்குழுவின் 3ஆவது ஆய்வுக் கூட்டம் ரிப்பன் கட்டட அலுவலகக் கூட்டரங்கில் நடைபெற்றது.

இக்கூட்டத்தில், துணை ஆணையாளர் (சுகாதாரம்) திரு.தாக்கரே சுபம் ஞானதேவ்ராவ், இ.ஆ.ப., காவல் இணை ஆணையாளர் (வடக்கு) திரு.எம்.மனோகர், இ.கா.ப., பணிக்குழுவின் ஒருங்கிணைப்பாளர் / மாவட்ட சுற்றுச்சூழல் பொறியாளர் (அரும்பாக்கம்) டாக்டர் பு. சுகந்தி ராணி மற்றும் பல்வேறு துறைகளைச் சார்ந்த பணிக்குழு உறுப்பினர்கள் கலந்து கொண்டனர்.

தமிழ்நாடு அரசின் அரசாணை (நிலை) எண் 25, நாள் 07.02.2022-ன்படி அமைக்கப்பட்ட இப்பணிக்குழுவில் மாநகராட்சி ஆணையாளர் அவர்கள் தலைவராகவும், பெருநகர சென்னை மாநகராட்சியின் சார்பில் துணை ஆணையாளர் (சுகாதாரம்), வட்டார துணை ஆணையாளர்கள், மாநகர நல அலுவலர், மாநகர வருவாய் அலுவலர், மேற்பார்வைப் பொறியாளர் (திடக்கழிவு மேலாண்மை), சுகாதாரக் கல்வி அலுவலர், மக்கள் தொடர்பு அலுவலர் ஆகியோர் உறுப்பினராகவும், தமிழ்நாடு மாசு கட்டுப்பாடு வாரியத்தின் சார்பில் அரும்பாக்கம் மாவட்ட சுற்றுச்சூழல் பொறியாளர் ஒருங்கிணைப்பாளராகவும், அம்பத்தூர், வேளச்சேரி மற்றும் மணலி மாவட்ட சுற்றுச்சூழல் பொறியாளர்கள் உறுப்பினர்களாகவும், சென்னைப் பெருநகர் காவல் துறையில் கூடுதல்/இணை காவல் ஆணையாளர், இந்து சமய அறநிலையத்துறை மற்றும் வணிக வரித்துறையில் கூடுதல்/இணை ஆணையாளர்கள், மீன்வளத்துறையில் மண்டல இணை இயக்குநர், மருத்துவம் மற்றும் மக்கள் நல்வாழ்வுத்துறையில் இணை இயக்குநர், உயர்கல்வித்துறையில் முதன்மை கல்வி அலுவலர், உணவுப் பாதுகாப்புத்துறை, தொழிலாளர் மற்றும் திறன் மேம்பாட்டு, தொழில்துறை, சுற்றுலாத்துறை உள்ளிட்ட அரசுத் துறைகளைச் சேர்ந்த அலுவலர்கள் உறுப்பி னர்களாகவும் உள்ளனர்.

இக்கூட்டத்தில், பெருநகர சென்னை மாநகராட்சிப் பகுதிகளில் தடை செய்யப்பட்ட 28 வகையான நெகிழிப் பொருட்களின் விற்பனை மற்றும் பயன்பாட்டைத் தடுக்க மேற்கொள்ளப்பட்ட அமலாக்கப் பணிகள், பள்ளி, கல்லூரிகள் மற்றும் பொதுமக்களிடையே நடத்தப்பட்டு வரும் விழிப்புணர்வு நடவடிக்கைகள், உறுப்பினர் துறைகள் ஒவ்வொன்றின் பணிகள் மற்றும் பொறுப்புகள் குறித்தும் விரிவாக விவாதிக்கப்பட்டது.

பெருநகர சென்னை மாநகராட்சி சார்பில் 2019 முதல் 08.10.2026 வரை 13.17 லட்சம் வணிக நிறுவனங்களில் ஆய்வு மேற்கொள்ளப்பட்டு, 499 டன் தடை செய்யப்பட்ட பிளாஸ்டிக் பொருட்கள் பறிமுதல் செய்யப்பட்டு, விதிமீறிய வணிகர்களிடமிருந்து ரூ.9.40 கோடி அபராதம் வசூலிக்கப்பட்டுள்ளது. மேலும் 1,52,500 துணிப்பைகள் மாணவர்கள் மற்றும் பொதுமக்களுக்கு வழங்கப்பட்டுள்ளன என கூட்டத்தில் தெரிவிக்கப்பட்டது.

இக்கூட்டத்தில் ஆணையாளர் அவர்கள், அனைத்து உறுப்பினர் துறைகளும் தங்களுக்கு ஒதுக்கப்பட்ட பணிகளை முனைப்புடன் மேற்கொண்டு, ஒவ்வொரு மாதமும் நடவடிக்கை அறிக்கையைச் சமர்ப்பிக்க வேண்டும். தடை செய்யப்பட்ட பிளாஸ்டிக் பொருட்கள் சென்னைக்குள் கொண்டு வரப்படுவதைத் தடுக்கத் துறைகள் ஒருங்கிணைந்து செயல்பட வேண்டும் என அறிவுறுத்தினார்.

பொதுமக்கள் தடை செய்யப்பட்ட பிளாஸ்டிக் பொருட்களைத் தவிர்த்து, துணிப்பை உள்ளிட்ட சுற்றுச்சூழலுக்கு உகந்த மாற்றுப் பொருட்களைப் பயன்படுத்தி, பிளாஸ்டிக் மாசில்லா சென்னையை உருவாக்க ஒத்துழைப்பு நல்குமாறு ஆணையாளர் அவர்கள் தெரிவித்தார்.

**செய்தி வெளியீடு : இணை இயக்குநர் / மக்கள் தொடர்பு அலுவலர்,**

**பெருநகர சென்னை மாநகராட்சி.**